# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 67/மா/2023**

**நாள் : 09.05.2023**

P.S. நாகபிரபா,
சென்னை – 600 001. – முறையீட்டு மனுதாரர்

Zonal Health Officer, Department of Public Health,
Greater Chennai Corporation,
Rippon Building, Chennai – 600 003. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, ஜார்ஜ் டவுன், கதவு எண்.2, பரமானந்தா தெரு என்கிற முகவரியில் வசிக்கும் P.S. நாகபிரபா என்பவரின் 13.01.2023 நாளிட்ட மனு 18.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 67/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

பெருநகர சென்னை மாநகராட்சி, ஜார்ஜ் டவுன், கதவிலக்க எண்.2, பரமானந்தா தெரு, என்கிற முகவரியில் வசிக்கும் P.S. நாகபிரபா தனது முறையீட்டு மனுவில்,

> "மனுதாரர் P.S. நாகபிரபா, ஆகிய நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன் எனது தந்தையின் பெயர் P.S. ஸ்ரீகந்தராஜ் (P.S. Srikandaraj) ஆகும். எனது தந்தையின் அடையாள ஆவணங்கள் அனைத்திலும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் கடந்த 2021-ம் வருடம் இறந்துவிட்டார். எனது தாயார் பெயர் P.S. வரலட்சுமி கடந்த 1988-ம் ஆண்டே இறந்துவிட்டார். எனது தாயாரின்பெயரில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழில் எனது தந்தையின் பெயர் P.S. Srikanakaraj என தவறாக அச்சுபிழையுடன் பதிவேற்றம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது, அதில் உள்ள தவறை சரி செய்து சரியான பெயரான P.S. ஸ்ரீகந்தராஜ் (P.S. Srikandaraj) என்று மாற்றி தரும்படி நான் பலமுறை சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு மனு அனுப்பினேன் எனினும் அவர்கள் தற்போதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை பெயர் திருத்தமும் செய்து தரவில்லை.

2. எனவே, இத்துடன் நான் மாநகராட்சி அதிகாரிக்கு அனுப்பிய எனது மனு மற்றும் இது தொடர்பான ஆவணங்களின் நகல்கள் இணைத்து அனுப்பியுள்ளேன். ஆகவே உயர்திரு. ஐயா அவர்கள் எனது புகார் மனுவை கருணையுடன் பரிசீலனை செய்து எனது தாயார் இறப்பு சான்றிதழில் தவறாக உள்ள எனது தந்தையின் பெயரை திருத்தம் செய்து சரியான பெயரை பதிவு செய்து தர உரிய அதிகாரிகளுக்கு தகுந்த உத்தரவினை பிறப்பிக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 03.04.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 30.3.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 03.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"எனது தாயாரின் பெயர் P.S. வரலட்சுமி மற்றும் எனது தந்தையின் பெயர் P.S. ஸ்ரீகந்தராஜ் ஆகும். எனது தாயாரான P.S. வரலட்சுமி கடந்த 1988 ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். மாநகராட்சியால் வழங்கப்பட்ட எனது தாயாரின் இறப்புச் சான்றிதழில் எனது தந்தையின் பெயர் P.S. ஸ்ரீகனகராஜ் என மாநகராட்சியால் தவறாக குறிப்பிட்டு பதிவேற்றம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பிழையை சரி செய்து எனது தந்தையின் சரியான பெயரான P.S. ஸ்ரீகந்தராஜ் என மாற்றம் செய்து வழங்குமாறு மாநகராட்சியில் மனு அளித்திருந்தும் எனது மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனது தந்தை சென்னை தலைமைச் செயலகத்தில் கல்வித் துறையில் சார்புச் செயலராக பணிபுரிந்து 2010ல் ஒய்வு பெற்று கடந்த 2021ல் காலமானார். அவரது பெயரை தவறாக குறிப்பிட்டு அளிக்கப்பட்ட எனது தாயாரின் இறப்புச் சான்றிதழில் பிழை திருத்தம் செய்திட மாநகராட்சி அலுவலர்கள் வாரிசுதாரர்களின் பிறப்புச் சான்று, தடையின்மைச் சான்று போன்றவற்றையை தேவையில்லாமல் கேட்டு எங்களை அலைகழித்து வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சியின் பிறப்பு/இறப்பு பதிவாளர் 23.03.2022 நாளிட்ட கடிதத்தில் இறந்தவரின் தந்தை பெயர் இறப்பு பதிவேட்டில் உள்ளப்படி பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. முழுவதும் மாற்றம் செய்ய சாத்தியமில்லை என்று எனக்கு பதில் அனுப்பபட்டுள்ளது.

எனவே, எனது தாயாரின் இறப்புச் சான்றிதழில் எனது தந்தையின் சரியான பெயரான P.S. ஸ்ரீகந்தராஜ் என குறிப்பிட்டு, எனது தாயாரின் இறப்புச் சான்றிதழை சென்னை மாநகராட்சியால் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்து துப்புரவு அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர் 03.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :**

"மனுதாரரின் தாயாருக்கு அளிக்கப்பட்ட இறப்புச் சான்றிதழில் மனுதாரரின் தந்தையின் பெயர் P.S. ஸ்ரீகனகராஜ் என உள்ளதை, சரியான பெயரான P.S. ஸ்ரீகந்தராஜ் என மாற்றம் செய்திட மனுதாரரிடமிருந்து கடந்த 2022 அக்டோபரில் மாநகராட்சியில் மனு பெறப்பட்டு, தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு விதிகள் 2000 விதி

5(1) மற்றும் 5(3) ன்படி மனுதாரரின் தாயார் காலமான மருத்துவமனையிலிருந்து திருத்தக் கடிதம், வாரிசுதாரர்கள் தடையின்மைச் சான்று மற்றும் வாரிசுதாரர்களின் பிறப்புச் சான்று போன்றவற்றை தமிழ்நாடு தலைமை பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநரின் 22.9.2001 நாளிட்ட கடிதத்தின்படி மாநகராட்சியில் அளித்திட கடந்த 29.11.2022 அன்று கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணங்கள் மனுதாரரிடமிருந்து பெறப்பட்டு, மனுதாரின் தந்தையின் சரியான பெயரைக் கொண்ட மனுதாரரின் தாயாரின் இறப்புச் சான்றிதழ் மனுதாரருக்கு வழங்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்து துப்புரவு அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் தனது தாயாரின் இறப்பு சான்றிதழில் தனது தந்தையின் பெயர் P.S. ஸ்ரீகந்தராஜ் என்பதற்கு பதிலாக P.S. கனகராஜ் என்று தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதை திருத்தம் செய்து தருமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்களுக்கு 23.3.2022 நாளிட்ட மனுவில் (1) மனுதாரரின் தாயின் இறப்பு சான்றிதழ் (2) மனுதாரரின் தந்தை இறப்பு சான்றிதழ் (3) மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் (4) பழைய குடும்ப அட்டை (5) புதிய குடும்ப அட்டை (6) மனுதாரரின் தந்தையின் ஆதார் அட்டை (7) மனுதாரரின் கல்லூரி சான்றிதழ் (8) மனுதாரரின் பள்ளி சான்றிதழ் (9) மனுதாரரின் +2 மதிப்பெண் சான்றிதழ் (10) மனுதாரரின் தாய்,தந்தை பெயர் உள்ள பாஸ்போர்ட் (11) மனுதாரரின் தங்கை P.S. நாகபிரியா ஆதார் அட்டை (12) மனுதாரரின் ஆதார் அட்டை (13) மனுதாரரின் சாதி சான்றிதழ் (14) மனுதாரரின் பெயரில் உள்ள கேஸ் பில் (15) வாக்காளர் அட்டை ஆகியவற்றின் நகல்களை அளித்தும்; பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுப்பப்பட்ட 13.10.2022 நாளிட்ட மனுவில் உரிய ஆவண நகல்களை அளித்தும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அதனை ஏற்காமல் பெருநகர சென்னை மாநகராட்சியின் பிறப்பு/இறப்பு பதிவாளர் அலுவலகத்தின் மண்டல சுகாதார நல அலுவலர் (பு.வி) மனுதாரருக்கு முகவரியிட்ட கடித எண். பொ.சு.து.ம.சு.அ. (பு.வி.) ந.க.எண்.0590/2022 நாள்: 23.3.2022ல் "இறந்தவரின் தந்தை பெயர் இறப்பு பதிவேட்டில் உள்ளபடி பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும், முழுவதும் மாற்றம் செய்ய சாத்தியமில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் பொ. சு. து. / ம.ந.அ. (பு.வி) ந.க.எண்.0139/2022 29.11.2022 நாளிட்ட கடிதத்தில் (1) Hospital Amendment Letter/மருத்துவமனை திருத்தக்கடிதம் (2) வாரிசுதாரர்களின் NOC (3) வாரிசுதாரர்களின் பிறப்புச் சான்று (4) P.S. Srikanakaraj வரலட்சுமியின் கணவர் தான் என்பதற்கான ஆதார ஆவணங்களை அளிக்குமாறு மனுதாரரை கோரியுள்ளார்.

இந்நேர்வில் மனுதாரர் தன்னுடைய தந்தையின் பெயர் P.S. ஸ்ரீகந்தராஜ் என்று உள்ள ஆவணங்களை (necessary Documentary evidance) சமர்ப்பித்தும், மேலே குறிப்பிட்ட தேவையற்ற ஆவண நகல்களை குறிப்பாக Hospital Amendment Letter / மருத்துவமனை திருத்தக் கடிதம் P.S. Srikandaraj வரலட்சுமியின் கணவர்தான் என்பதற்கான ஆதார ஆவணங்கள் கோரியுள்ளது பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல நல அலுவலர் (புவி) அவர்கள் பணியில் அலட்சிய போக்கினையும், பொறுப்பற்ற தன்மையினையும் காண்பிக்கிறது இதனை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மனுதாரரின் பிறப்பு சான்றிதழில் (COC/1981/06/091/000371/0) மனுதாரரின் தந்தையின் பெயர் திரு. ஸ்ரீகந்தராஜ் என்று சரியாக பதிவேற்றம் செய்த City Health Officer தான், மனுதாரரின் தாய் இறப்பு சான்றிதழில்

(CoC/1986/06/047/000371/0) மனுதாரரின் தந்தை பெயரை P.S. ஸ்ரீகனகராஜ் என்று தவறாக பதிவேற்றம் செய்துள்ளார். இதிலிருந்து City Health Officer தன்னுடைய கடமையை சரிவர செய்யவில்லை என்பது தெளிவாகிறது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர், வருவாய் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறையில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கும் போது, எவ்வித புகாருக்கு இடம் அளிக்காமல் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். ஆனால் அதற்கு நேர் எதிர் மறையாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர்கள் செயல்படுவது ஏற்கத்தக்கதல்ல. இத்தகைய மெத்தனப்போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். மேலும் பிற மாநிலமான இமாச்சல பிரதேச மாநிலத்தில் வழங்கப்பட்டுள்ள இறப்பு சான்றிதழில் (Death Certificate) மனுதாரரின் தந்தை பெயர் திரு. P.S. Srikandaraj என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது.

மேலும், The Registration of Births and Deaths Act 1969, (C.Act No.18 of 1969) பிரிவு 15ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

15. Correction or cancellation of entry in the register of births and deaths – If it is proved to the satisfaction of the Registrar that any entry of a birth or death in any register kept by him under this Act is erroneous in form or substances, or has been fraudulently or improperly made, he may, subject to such rules as may be made by the State Government with respect to the conditions on which and the circumstances in which such entries may be corrected or cancelled, correct the error or cancel the entry by suitable entry in the margin, without any alteration of the original entry, and shall sign the marginal entry and add thereto the date of the correction or cancellation.

Tamilnadu Registration of Births and Deaths Rules, 2000 விதி 11ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது Correction or cancellation of entry in the register of births and deaths under section 15. – (1) If it is reported to the Registrar that a clerical or formal error has been made in the register or if such error is otherwise noticed by him and if the register is in his possession, the Registrar shall enquire into the matter and if he is satisfied that any such error has been made, he shall correct the error (by correcting or cancelling the entry) as provided in section 15 and shall in the case of local authorities specified in column (1) of the Table below send an extract of the entry showing the error and how it has been corrected to the officer specified in column (2) thereof.

மேற்கண்ட விதியின்படி மனுதாரரின் கோரிக்கை மனுவுடன் இணைத்துள்ள அத்தியாவசிய ஆவணங்களை [Necessary Documentary evidence] கருத்தில் கொண்டு விசாரிக்காமல் தேவையற்ற, அவசியமற்ற ஆவண நகல்களை பெருநகர சென்னை மாநகராட்சி பிறப்பு/இறப்பு பதிவு பிரிவின் மண்டல நல அலுவலர் கோரியுள்ளது ஏற்கத் தக்கதல்ல.

மேலும், Director of Public Health and Preventive Medicine, Chennai, R.No.13932/SBH1/S1/2001-1 22.9.2001 நாளிட்ட கடிதத்தில் இறப்பு குறித்த திருத்தங்கள் எவ்வாறு மேற்கொள்வது என்று பின்வரும் அறிவுரைகளை வழங்கியுள்ளது.

**Before Corrections**

1. Certificates from two credible persons should be compulsory obtained.

2. Where ever necessary, any other supportive documents may also be insisted as per Section 21 of the Registration of Birth and Death Act to ensure correctness of the details.

3. The fact of party approaching for such corrections are really concerned with the event, as well as the facts of the case should thoroughly enquired.

4. After ascertaining the facts of the cases, written permission of the competent authority should be obtained as per Rule 11(1) and 11(2) and 11(3).

**For effecting Corrections**

1. The original entry should not be erased or scored out, but should be rounded by ink and the correct details should be entered by the side of it.
2. The registrar should sign with date for each correction made by them.
3. In the first page of the each register, the details of Annual No. and the details of corrections effected should be indicated serially and the signature of the executive authority should be obtained then and there.
4. If any corrections are to be effected after the issue of certificate, then the fact should be entered in the register as well as in the certificates issued after corrections subsequently.

It is also informed that corrections are to be effected based on necessary documentary evidence and thorough enquiry, further corrections on the same item should not be entertained since it may go against the validity of the previous enquiry and proofs obtained.

பெருநகர சென்னை மாநகராட்சி, பிறப்பு/இறப்பு பதிவு பிரிவு மண்டல நல அலுவலர் (பு.வி.) மேற்கண்ட அறிவுரைகளை இந்நேர்வில் கடைப்பிடிக்காமல் மனுதாரரை மன உளைச்சலுக்கு ஆளாக்கியது மிகவும் வருந்ததக்கது மற்றும் கண்டிக்கத்தக்கது ஆகும். பொது மக்களின் நலனை கருத்தில் கொள்ளாமல் உள்ளார்ந்த நிலையுடன் பணியாற்றாமல் மனுதாரரின் மனுவை எவ்வாறு நிராகரிக்கலாம் என்ற எண்ணத்தோடு மட்டும் செய்யப்பட்டுள்ளதை இம்முறைமன்றம் வருத்தத்துடன் பதிவு செய்கிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளின் படி குறிப்பாக பிரிவு 7 (ii) (c)ல் வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

இந்நேர்வில் பொறுப்பற்ற முறையில் செயல்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சியின், பிறப்பு/இறப்பு பதிவு பிரிவின் சம்பந்தப்பட்ட மண்டல நல அலுவலர்கள் (பு.வி.) மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு, பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையருக்கு பரிந்துரை

செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள necessary documentary evidence அடிப்படையில் இறப்பு சான்றிதழில் உரிய திருத்தம் செய்து 30 நாட்களுக்குள் வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் பிறப்பு/இறப்பு பதிவு பிரிவின் மண்டல நல அலுவலர் (பு.வி) அவர்களுக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 30 நாட்களுக்குள் அளிக்குமாறும் ஆணையிடுகிறது.

This is a typical case of sheer cruelty, autocracy, arrogance and authoritarianism at the level of Sanitary Officer / Sanitary Inspector wherein they have chosen to drive a poor petitioner from pillar to post without any basis except being inhuman, insensitive, indifferent and imperial. This is the fate of a deceased person who was an Under Secretary level Secretariat Office while in service. The daughter has produced the following documents

1) Name of the deceased as Thiru. P.S. Srikandaraj in the Aadhaar Card
2) P.S. Srikandaraj in the EPIC
3) P.S. Srikandaraj in the Certificate issued by the Himachal Pradesh Government Health authorities.
4) The Birth Certificate issued in the authority of the Chief Health Officer Dr. Jegadesan which shows Thiru P.S. Srikandaraj as the father of the Petitioner when she was born in the year 1981.
5) Ration Card (Old & New)

This being so the Sanitary Officer / Sanitary Inspector had the audacity to cause extreme mental auguish, inconvenience and delay for 1 year to the petitioner. When this is the fate of a retired and deceased US level Secretariat Officer, the condition of the ordinary mortals is to be only imagined at the hands of such unconscientious and wicked field officials of the Corporation. The Greater Chennai Corporation is directed to initiate strict disciplinary action against the two delinquent officials for total misconduct and dereliction of duties. The Chief Health Officer deserves to be censured for lack of supervision over such brutal subordinates who deserve exemplary punishment. They have the temerity to produce some instructions from the Director of Public Health to justify their action which is dismissed and thrown to the dustbin by this Forum. Let the Chief Health Officer see his printed name in the printed Birth Certificate of the Petitioner, wherein her father's name is mentioned clearly as P.S. Srikandaraj and the same Chief Health Officer sits pretty well in the seat when such tragic occurrences take place under his very nose. This kind of employees bring bad repute to the Local Body by their crass, coarse and cold-blooded act of approach to basic services like issue of a Death Certificate. This wanton behavior cannot be brooked easily. When the Government in L.A. and Honourable Chief Minister emphasise on prompt and hassle-free services to the citizens the Greater Chennai Corporation Officials in the present instance have acted totally in contravention and tar the image of the Greater Chennai Corporation in black Colour. The Forum expresses its deep shock, dismay and downnight displeasure over the episode and orders that the certificate should be issued within 10 days of the issue of the orders. The Government in Honourable Chief Minister's Office and MAWS is being marked with copies of this order to expose the unlawful delays and denial of services in the Greater Chennai Corporation to the ordinary people.

The query of the Sanitary Officer / Sanitary Inspector addressed to the daughter, Petitioner asking her to prove that her father was her mother's husband is highly provocative besides being cheep inhuman and barbaric. There is no objection received from anyone against the correction of the name of the deceased. This being so, the behaviour of the delinquent respondents of the Greater Chennai Corporation is anything but humane, legal and ethical.

Let the Commissioner of Greater Chennai Corporation take this as a case study to avert any recurrence in future affecting the ordinary citizens of the Metropolis. An action taken report should be sent to this Forum in the next 15 days.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 9 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) P.S. நாகபிரபா,
த/பெ.ஸ்ரீகந்தராஜ்,
எண்.2, பரமாந்த தெரு,
ஏழு கிணறு, (ஸ்டான்லி மருத்துவமனை அருகில்)
சென்னை – 600 001.

2) துணை ஆணையாளர் (Health)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) Zonal Health Officer, Department of Public Health,
Greater Chennai Corporation,
Rippon Building,
Chennai 600 003.

4) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

5) The Additional Chief Secretary to Government,
Municipal Administration and Water Supply Department,
Chennai – 600 009.

6) The Secretary (II) To Honourable Chief Minister,
Chief Minister Office,
Secretariat, Chennai – 600 009.

7) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.

9/5/23